# MODUL SOALAN TOPIKAL CEMERLANG AMANJAYA SPM 2018

BAHASA TAMIL

**தமிழ் மொழி எஸ்.பி.எம்.**

6354

# SET 7

**விடிவெள்ளி 7**

**நனிசிறந்த மாணவர் / Pelajar CEMERLANG**

**பிரிவு ஆ : கருத்துணர்தல் [படைப்பிலக்கியம்]**
[30 புள்ளிகள்]

**கேள்விகள் 11 முதல் 14 வரை**
கொடுக்கப்பட்டுள்ள சிறுகதைப் பகுதியை வாசித்து, தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை காண்க.

"அண்ணே சாமிக்கண்ணு அண்ணே! ஒனக்கு விஷயம் தெரியுமா?" என்று கிராவல் சடக்கில் நின்றவாறு, பள்ளத்தில் மண்ணைக் கொத்திக்கொண்டிருந்த சாமிக்கண்ணுவைப் பார்த்து சத்தம் போட்டுக் கேட்டார் தாண்டவராயன்.

தன்னைப் பெயர் சொல்லி அழைத்த யாரோ ஒருவர் ஏதோ ஒன்றைக் கேட்பதை உணர்ந்த சாமிக்கண்ணு கொத்துவதை நிறுத்திவிட்டு சூரியனை மறைப்பதற்காகத் தன் இடக்கையைப் புருவங்களுக்கு மத்தியில் கொண்டுபோய் வைத்தபடி சுமார் ஐம்பது கெஜ தூரமுள்ள மண் சடக்கை அண்ணாந்து பார்த்தார். கொத்தும்போது பரவிய மண் சிதறல்கள் அவர் உடம்பெல்லாம் ஒட்டிக்கொண்டு அம்மைக் கொப்புளங்கள் போன்று காட்சியளித்தன.

அங்கே மண் சடக்கில் தாண்டவராயன் நின்றுகொண்டிருப்பது தெளிவாகத் தெரிந்தது.

"நம்ப அப்பாவு கெழவன் மண்டையெப் போட்டுட்டாரு அண்ணே! அதெச் சொல்லிக் கூட்டிக்கிட்டுப் போகத்தான் வந்தேன்" என்று தாண்டவராயன் கூறிய அந்த ஒரு கணத்தில் சாமிக்கண்ணுவின் மனத்தில் ஒரு சலனம் தோன்றி மறைந்தது.

"அடப் பாவமே! அந்தெக் கெழவன் இந்த வெயில் காலத்துலதானா செத்துத் தொலைக்கனும்" என்று அனுதாபத்தோடு சொன்னவர், "கொஞ்சம் இருங்கண்ணே, இதோ வந்துட்டேன்" என்று சொல்லிக் கொண்டே அருகே சலசலத்து ஓடும் ஓடையை நோக்கி நடந்தார்.

ஓடையை ஒட்டிப் புதர்போல் மண்டியிருந்த நீர்க் கொடிகளுக்கிடையே தன் மண்வெட்டியைச் சொருகி வைத்தார். பின்னர் முழங்கால் அளவே நீர் ஓடும் அந்தச் சிற்றோடையில் இறங்கி கை கால்களை நன்றாக அலம்பிக் கொண்டார்.

அமரர் துன் அப்துல் ரசாக்கினால் அறிமுகப்படுத்தப்பட்ட பச்சைப் புத்தகத் திட்டத்தின் கீழ் அந்தப் புக்கிட் அப்பி தோட்டத்தில் தோட்ட நிருவாகம் பேருக்கென்று ஒதுக்கித் தந்த இடத்தில் ஒவ்வொரு தொழிலாளிக்கும் நாலு மண்வெட்டி இடம்தான் கிடைத்தது. ஒரு 'பத்தாஸ்' கூட அமைக்க முடியாத இடத்தில் பாடுபட்டு என்னத்தைக் கண்டுவிட முடியும் என்று முன்யோசனை செய்த சிலர் தங்களுக்குக் கிடைத்த பங்கையும்

ஐந்து ரிங்கிட்டுக்கும் பத்து ரிங்கிட்டுக்கும் விற்றுவிட்டு அந்தப் பணத்தில் சில நாள்கள் தண்ணீர் ஊற்றிக் கொண்டார்கள்.

அப்படிப் பணம் கொடுத்து மற்றவர் நிலத்தை வாங்கியவர்களுள் சாமிக்கண்ணுவும் ஒருவர். அவர் ஐந்து பேரிடம் நாற்பது கொடுத்தார். அந்த நிலத்தைத்தான் எஸ்டேட் வேலை முடிந்ததும் அப்போது வந்து கொத்திக் கொண்டிருந்தார்.

தாண்டவராயனும் சாமிக்கண்ணுவும் இறந்து கிடக்கும் அப்பாவு கிழவனின் வீட்டை நோக்கி நடந்தார்கள்.

தாண்டவராயன் சாமிக்கண்ணுவைத் தேடிக் கொண்டு வந்ததற்கு முக்கியக் காரணம் இருந்தது. அது போன்று அநாதைப் பிணங்கள் விழுந்துவிட்டால் அப்பிணத்தைப் பொதுவசூல் மூலம் அடக்கம் செய்யும் பெருஞ்செயலைச் சாமிக்கண்ணுதான் மேற்கொள்ளவார். இதற்கு முன்னர் நாலைந்து முறை அப்படிச் செய்திருக்கிறார்.

எல்லாரும் அவர்மீது நம்பிக்கை வைத்திருப்பதற்குக் காரணம் அவர் அந்தத் தோட்டத்தில் நெடுங்காலமாக வசித்து வருகிறார் என்பதற்காக மட்டுமல்ல, நாணயமிக்கவர் என்பதில் மக்கள் அசையாத நம்பிக்கை கொண்டிருப்பதால்தான்.

அப்பாவுக் கிழவர் அதே தோட்டத்தில் மரம் வெட்டிப் பிழைத்தவர். பதவி ஓய்வு பெற்றதும் அவருக்கு மிகவும் நண்பராயிருந்த **ஒண்டிக் கட்டை** நாராயணசாமி வீட்டில்தான் தங்கியிருந்தார். நாராயண சாமியின் மனைவி மக்கள் எல்லாரும் மே பதின்மூன்றுக்குப் பின்னர் 'ஊருக்குக்' குடியேறிவிட்டார்கள். மாதா மாதம் நாராயணசாமி ஊருக்குப் பணம் அனுப்பி விடுவார். அதன் காரணமாக அப்போது நாராயணசாமியின் கையிலும் ஓட்டமில்லை, அதனால்தான் சாமிக்கண்ணுவைத் தேடிவரும் நிலை ஏற்பட்டது.

(உடல் மட்டும் நனைகிறது - பி.கோவிந்தசாமி)

11 தாண்டவராயன் சாமிக்கண்ணுவைத் தேடி வந்த **காரணம் யாது**?
(3 புள்ளி)

12 பச்சைப் புத்தகத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிலத்தை அப்பி தோட்ட மக்கள் முழுமையாகப் பயன்படுத்தாதற்கு இரண்டு காரணங்கள் யாவை?
(4 புள்ளி)

13 அ) அப்பி தோட்ட மக்களிடம் காணப்படும் குறைபாடுகள் இரண்டினை எழுதுக.
(4 புள்ளி)

ஆ) இச்சிறுகதை வாயிலாகச் சாமிக்கண்ணுவைப் பற்றி நீ அறிந்து கொண்டது என்ன?
(4 புள்ளி)

14. இச்சிறுகதை உனக்குள் ஏற்படுத்திய தாக்கம் என்ன? (5 புள்ளி)

15. கீழே கொடுக்கப்பட்டுள்ள கவிதையை வாசித்து **உமது சொந்த மொழிநடையில் விளக்கம் எழுதுக.**

பொழுதைப் பொன்னென்றார்- விழிக்குள்ளே அதனைப்
வைத்தனரோ பலரும்?
அழுதே புரண்டாலும் அதுவருமோ மீண்டும்
அறிந்தால் பொழுதிங்கே புலரும்
பொழுதைப் பாழ்படுத்தி பழுதிங்கே பட்டோம்
விழித்திங்கு எழுதுவோம்
துளியே ஆனாலும் ஒளியாகும் வாழ்வில்
பொழுதே இறைவில்வரம் தொழுவோம்!

(எம்.கே.ஞானசேகரன்)

19 கீழ்க்காணும் பனுவலில் அடைப்புக்குள் இருக்கும் இடங்களுக்குப் **பொருத்தமான** மொழியணிகளை எழுதுக. **பத்தியை மீண்டும் எழுத வேண்டாம்**.

ஒரு நாட்டின் முன்னேற்றமோ அல்லது ஒரு தனி மனிதனின் முன்னேற்றமோ அவனது பொருளாதரம், கல்வி, நாட்டின் நிலைப்பாடு, சமூகம் போன்ற அடிப்படையில் கணக்கிடப்படுகின்றது. பொருளாதாரம் ஒவ்வொரு மனிதனின் மூலதனம். இந்திய இளைஞர்களின் துணிவும், முற்சியும் இத்துறையில் உன்னத நிலையில் நிற்கிறது என்றால் அது மிகையாகாது.( I இணைமொழி ) இன்னும் சிறிது முயற்சித்தால், வெற்றி கண்ட இந்திய வணிகர்கள் வாழ்க்கையில் செயல் இழந்து திணறிக் கொண்டிருக்கும் இளைஞர்களை எழுந்து வா! என்று கூறித் தோளைத் தட்டி, கை கொடுத்துத் தூக்கி விட முன்வர வேண்டும். ( II உவமைத்தொடர்)

கல்விக்கு என்று ஒரு தெய்வம் உள்ளது என்றால் அது நமது சமுதாயத்தில் மட்டுமே. ஒவ்வொரு வருடமும் எப்படித் தமிழ்ப்பள்ளிகளில் இந்திய மாணவர்களின் எண்ணிக்கை உயருகின்றதோ, அதேபோல் மாணவர்களின் தேர்ச்சி விகிதமும், கல்வியில் இந்திய இளைஞர்களின் சாதனையும் மெய்சிலிர்க்கத்தான் வைக்கின்றது. இவர்கள் அரசாங்கத்தின் திட்டங்களையும் முயற்சிகளையும் நன்றாக ஆராய்ந்து கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.( III பழமொழி )

இந்திய இளைஞர்கள் சளைத்தவர்கள் அல்லர். எதிலும், எப்பொழுதும் வெற்றிக் கொடியைப் பறக்க விட வந்தவர்கள். 'என்னால் முடியாது' என்றாலும் 'முயற்சி செய்வேன்' என்பான் இந்திய இளைஞன். 'எவ்வளவு புதைந்தாலும், மீண்டும் எழுவேன்' என்ற எண்ணம் கொள், இன்று இல்லாவிட்டாலும், 'என்றாவது வருவேன்' என்று வீரியம் கொள். உனக்கு சுட்டிக் காட்டி எப்பொழுதும் ஒருவருவருக்கொருவர் தீய எண்ணத்தை ஒழித்து நல்லதைச் செம்மைப்படுத்த வேண்டும்.( IV திருக்குறள் )இவ்வாறு செய்தால் இளைஞர்களுக்கு முன்னேற்றமும் வெற்றியும் உறுதி.

**பிரிவு ஈ : இலக்கணம்**
**[10 புள்ளிகள்]**
**கேள்வி 22**

22 கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் காணும் **ஐந்து பிழைகளை** அடையாளம் கண்டு அவற்றைத் திருத்திப் பட்டியலிடுக.
[நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்]

| |
|---|
| தாயின்வழி வந்த மொழி தாய்மொழி என்கின்றோம். நாம் பிறந்ததிலிருந்து ஐம்புலன்களில் உணரக் கூடிய உணர்வுகளோடு ஊறிய, சிந்திக்கக் கற்று கொடுக்கும் மொழியாகத் தாய்மொழி விளங்குகின்றது. தாய்மொழி என்பது சிந்தனை மொழியாகும். தாய்மொழிக் கல்வி என்பது நாம் சிந்திக்கின்ற மொழியில் பயிற்றுவிக்கப்படுகின்ற கல்வியாகும்.<br>தாய்மொழி வழியில் தொடக்கக் கல்வியை வழங்கும் போது குழந்தைகள் தாம் நினைக்கும் எண்ணங்களையும் தாமரிந்த தகவல்களையும் தமக்குத் தெரிந்த மொழியில் உடனே வெளிப்படுத்துகின்றது. தாய்மொழியில் கற்கும்போது ஒன்றை பற்றிய முலுமையான தகவல்களைத் தெளிவாக மாணவர்களால் அறிந்துக் கொள்ள முடிகின்றது. |

[10 புள்ளி]

**விடிவெள்ளி 7**

**நனிசிறந்த மாணவர் / Pelajar CEMERLANG**
**பரிந்துரைக்கப்பட்ட விடைகள்**

**கேள்வி 15**
காலத்தைப் பொன் போன்றது என்று கூறுவார்கள். காலத்தின் அவசியத்தை உணர்ந்தவர் பலர். காலத்தை ஒரு முறை தவற விட்டு விட்டால் நாம் எவ்வளவு அழுது புரண்டாலும் அது திரும்பவராது. இதனைத் தெரிந்து செயல்பட்டால் நாளைய பொழுது சிறப்பாகப் புலரும். நல்ல பொழுதைப் பாழ்படுத்தியதால் நாம் துன்பம் அடந்தோம். காலத்தின் அருமையைக் கருத்தில் கொண்டு நாம் செயல்பட வேண்டும். ஒரு மணித்துளி ஆனாலும் அதனைக் கவனமாகப் பயன்படுத்தினால் வாழ்வில் முன்னேற்றத்தைக் கொடுக்கும். காலம் என்பது இறைவன் கொடுத்த வரமாகும். எனவே, அதனைத் தொழுவோம்.

**கேள்வி 19**

i ) இணைமொழி : சீரும் சிறப்பும்

ii ) உவமைத்தொடர் : சிறகு இழந்த பறவை போல

iii ) பழமொழி : காற்றுள்ள போதே தூற்றிக்கொள்

iv ) திருக்குறள் : நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு

**கேள்வி 22**

| பிழை | சரி |
|---|---|
| 1) கற்று | 1) கற்றுக் |
| 2) அறிந்துக் | 2) அறிந்து |
| 3) முலுமையான | 3) முழுமையான |
| 4) ஒன்றை | 4) ஒன்றைப் |
| 5) தாமரிந்த | 5) தாமறிந்த |